**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி**

**முன்னிலை - திரு. R.பூமிநாதன், B.Sc.,B.L.,**

**நீதித்துறை நடுவர், நான்குநேரி**

**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 23 ஆம் நாள் வியாழன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 376/2017**

**CNR No. TNTL 20-000680-2017**

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>மூலைக்கரைப்பட்டி காவல் நிலையம்,<br>குற்ற எண். 102/2016. | **.... குற்றமுறையிட்டாளர்** |

**/எதிர்/**

| | | |
|---|---|---|
| 1) | மகாதேவன், வயது 26/2016,<br>த/பெ. சொள்ளமுத்து,<br>வடக்கு தெரு,<br>கல்லத்தி. | |
| 2) | சரவணகுமார், வயது 28/2016,<br>த/பெ. சக்கரவர்த்தி,<br>வடக்கு தெரு,<br>கல்லத்தி. | |
| 3) | செந்தில்குமார், வயது 23/2016,<br>த/பெ. சேர்மன்,<br>வடக்கு தெரு,<br>கல்லத்தி. | **.... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்** |

இவ்வழக்கானது 21/11/2017-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 17/07/2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 திரு.மைக்கேல் ஜெரால்டு அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்காக வழக்கறிஞர் திரு.P.M. முருகன், அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | மூலைக்கரைப்பட்டி காவல் நிலையம் குற்றஎண். 102/2016 | |
|---|---|---|---|
| 1 | 1 வது குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | மகாதேவன் |
| | | தந்தை பெயர் | சொள்ளமுத்து |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | கல்லத்தி |
| | | வயது | 26/2016 |
| 2 | 2 வது குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | சரவணகுமார் |
| | | தந்தை பெயர் | சக்கரவர்த்தி |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | கல்லத்தி |
| | | வயது | 28/2016 |
| 3 | 3 வது குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | செந்தில்குமார் |
| | | தந்தை பெயர் | சேர்மன் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | கல்லத்தி |

| | | |
|---|---|---|
| | வயது | 23/2016 |
| 4 | சம்பவ தேதி | 14/08/2016 |
| 5 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை தாக்கலான தேதி | 17/11/2017 |
| 6 | கைது<br>1 வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>2 வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>3 வது குற்றம்சாட்டப்பட்டவர் | <br>22/08/2016<br>14/08/2016<br>14/08/2016 |
| 7 | பிணையில் விடுவித்ததல்<br>1 வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>2 வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>3 வது குற்றம்சாட்டப்பட்டவர் | <br>22/08/2016<br>19/08/2016<br>19/08/2016 |
| 8 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | 11/02/2021 |
| 9 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 27/08/2021 & 27/08/2021 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 27/08/2021 & 27/08/2021 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 04/07/2025 & 04/07/2025 |
| | அ.சா.4 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 10/07/2026 & 10/07/2026 |
| 10 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 13/07/2026 |
| 11 | விசாரணை முடிவு | 17/07/2026 |
| 12 | தண்டனை அல்லது உத்தரவு | 23/07/2026 |
| 13 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான காண்முடிவு /முடிவு | 23/07/2026 |
| 14 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**:

கடந்த 14.08.2016 ம் தேதி 12.00 மணிக்கு மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய சரகம் அரசனார்குளத்திலுள்ள சுமார் ரூ.3000/- மதிப்புள்ள மணலை TN 74 W 4802 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா நிசான் டிம்போவில் எதிரிகள் அரசனார்குளம் குளத்துக்குள் கூட்டாக சேர்ந்து எவ்வித அரசு அனுமதியின்றி சொந்த லாப நோக்கிற்காக ரூ.3000/- மதிப்புள்ள 1 யூனிட் குளத்து மணலை திருடி அரசுக்கு ஆதாய இழப்பு ஏற்படுத்திய குற்றத்திற்காக மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 379 படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **<u>எதிரிகளுக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல்</u>** :

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **<u>குற்றச்சாட்டு வனைதல்</u>**:

எதிரிகளுக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து 1,2,3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 379 படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **<u>அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:

(i) அ.சா.1 முருகன் தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2016 ம் தேதி 11.30 மணியளவில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது

போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலின் படி 12.00 மணியளவில் தண்ணீர் இல்லாத அரசனார்குளம் மணல் திருட்டு சம்பந்தமாக தான் மற்றும் முதல்நிலை காவலர் 2340 திரு.ஜெயகுமார் மற்றும் 1652 முத்துகிருஷ்ணன் ஆகியோர் சகிதம் ரோந்து செய்து கண்காணித்து வரும் போது மேற்படி குளத்தில் இருந்து சந்தேகத்தின் படி எதிரே வந்த மகேந்திரா நிஸான் TN 74 480 பதிவெண் கொண்ட வாகனத்தை மறித்த போது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் நிறுத்தாமல் தங்கள் மீது மோத வந்தார் என்றும், சுதாரித்து கொண்ட தாங்கள் மேற்படி வாகனத்தை சுற்றி வளைத்து மடக்கிய போது மேற்படி வாகனத்தில் இருந்த டிரைவர் மற்றும் லோடுமேன், அதன் உரிமையாளர் ஆகியோர் வாகனத்தில் இருந்து இறங்கி ஓடும் போது இன்றைக்கு தப்பிச்சிவிட்டுங்க போலிஸ்கார நாய்களா உங்களை திரும்பவும் வாகனத்தை ஏற்றி கொல்லாமல் விடமாட்டேன் என வர்மித்துவிட்டு ஓடியவர்களை மடக்கி பிடிக்க வாகனத்தின் ஓட்டுனர் சரவணகுமார் மற்றும் செந்தில்குமார் உரிமையாளர் பெயர் விசாரிக்க மகாதேவன் த என தெரியவந்தது என்றும், மேற்படி வாகனத்தையும், சொத்தையும் கைபற்றி அத்தாட்சி தயாரித்த போது பொதுமக்கள் யாரும்முன் வந்து கையெழுத்து செய்யாததால் தானும் மற்றும் தலைமைகாவலர் ஜெயகுமார், தலைமைகாவலர் முத்துகிருஷ்ணன் ஆகியோர் கையொப்பமிட்டோம் என்றும், மேற்படி வாகனத்தின் குளத்துமணல் இருந்தது என்றும், அதன் மதிப்பு ரூ.3,000/- ஆகும் மேற்படி வாகனம் மற்றும் சரவணகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை 13.00 மணிக்கு மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தல் பொறுப்பிலிருந்த உதவி ஆய்வாளரிடம் தனி அறிக்கையுடன் சமர்பித்து மேற்படி எதிரிகள் தங்களை பணி செய்யவிடாமலும், மிரட்டியும் அரசு அனுமதியின்றி கடத்தி வந்த திருட்டு மணலையும் ஆஜர் செய்து நடவடிக்கை எடுக்க உதவி ஆய்வாளரிடம் தனி அறிக்கை உடன் அறிக்கை செய்தோம் என்றும், காட்டப்படும் அ.சா.ஆ.1 அத்தாட்சி தான் தயார் செய்தது தான் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அ.சா.ஆ.2 தனி அறிக்கை தான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், காட்டப்படும் புகைப்படத்திலுள்ள வாகனம் தான் கைபற்றியது அந்த புகைப்படங்கள்

சா.பொ 1 மற்றும் 2 ஆகும் என்றும், ஆஜர் எதிரிகள் தான் இந்த வழக்கில் சம்பவத்தின் ஈடுபட்டார்கள் என்றும், இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 முத்துகிருஷ்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2016 ம் தேதி 1130 மணியளவில் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.முருகன், தலைமை காவலர் ஜெயகுமார் மற்றும் தான் ஆகியோர்கள் தண்ணீர் இல்லாத அரசனார்குளத்தில் மணல் கடத்துவதாக கிடைத்த தகவலின் பேரில் ரோந்து செய்ய போது மகேந்திரா நிஸான் TN 74 480 என்ற பதிவெண் கொண்ட வாகனம் அதிவேகமாக வந்தது வரும் போது அதை நாங்கள் மடக்கும் போது தங்கள் மீது மோதுமாறு வந்தது தாங்கள் விலகி கொண்டபடியால் வாகனம் திரும்பி செல்லும் போது அதில் உள்ள வண்டியை ஓட்டிய சரவணகுமார், செந்தில்குமார் மற்றும் உரிமையாளர் மகாலிங்கம் ஆகியோர்கள் தங்களை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி போகும்போது தாங்கள் பின்னால் மடக்கி பிடித்தோம் சரவணகுமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோர்களை மட்டும் பிடித்துவிட்டோம் என்றும், மகாலிங்கம் தப்பிவிட்டார் என்றும், வண்டியை சோதனை செய்த போது அதில் ரூ.3,000/ - மதிப்புள்ள குளத்து மணல் இருந்தது என்றும், அத்தாட்சியில் கையெழுத்திட பொதுமக்கள் யாரும் முன்வராததால் தாங்களை கையொப்பமிட்டு வண்டியையும் அதில் இருந்த குளத்து மணலையும் நிலையம் கொண்டு வந்து ஆஜர் செய்தோம் என்றும், காட்டப்படும் அ.சா.ஆ.3 அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், உதவி ஆய்வாளர் தன்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.4 கதிரேசன் தனது சாட்சியத்தில் கடந்த 14.08.2016 ஆம் தேதி 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருக்கும்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலைய எஸ்எஸ்ஐ முருகன் நிலையத்தில் ஆஜராகி ஒரு தனியறிக்கையும், அத்தாட்சியும்

சொத்துக்களையும், எதிரிகள் சரவணகுமார், செந்தில்குமார் ஆகியோர்களை தன்னிடம் ஒப்படைத்தார்கள் என்றும், தான் அதை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண் 102/2016 இ.த.ச. பிரிவுகள் 354, 506(2), 379 (Sand theft) மற்றும் 21(1),(4) MMDR என்ற அ.சா.ஆ.5 வழக்கை பதிவு செய்துள்ளார் என்றும், இந்த வழக்கை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 14.08.2016 ம் தேதி 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் ஐயப்பன், முத்துகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.6 பார்வை மகஜர், அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பின்பு சாட்சிகள் சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன், தலைமை காவலர்கள் ஜெயகுமார், முத்துகிருஷ்ணன், பார்வை மகஜர் சாட்சிகளான ஐயப்பன், முத்துகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார் என்றும், இந்த வழக்கில் இ.த.ச. பிரிவு குற்றங்கள் மட்டும் புலனாவது தெரிந்ததால் விசாரணைக்காக வழக்கு கோப்பை தன்னிடம் ஒப்படைத்தார் என்றும், உத்தரவுபடி வழக்குகோப்பை பெற்றுக்கொண்டு 18.11.2016 ம் தேதி சம்பவயிடம் சென்று பார்வையிட்டத்தில் ஆய்வாளர் தயார் செய்த மாதிரிவரைபடம், பார்வை மகஜர் சரியாக இருந்ததால் தான் புதிதாக பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை தான் விசாரித்தபோது அவர்கள் அனைவரும் காவல் ஆய்வாளரிடம் கூறியதுபோல தன்னிடம் கூறியதால் தான் தனியாக புதிதாக வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றும், வழக்கிற்கு பயன்படுத்தப்பட்ட TN 74 480 மகேந்திரா நிசான் டெம்போவை சிறப்பு உதவி ஆய்வாளர் முருகன் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதை அ.சா.ஆ.8 படிவம் 91 ன் மூலம் நீதிமன்ற பாதுகாப்புக்கு அனுப்பிவைத்தேன் என்றும், வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலை அரசுக்கு வழக்கில் சேர்க்கும்விதமாக பொதுப்பணித்துறையில் ஒப்படைத்தேன் என்றும், அந்த கடிதம் அ.சா.ஆ.9 ஆகும். புகாரின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள்

மீது இதச பிரிவு 379 ன் படி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

5) **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :

இவ்வழக்கில் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 6 சாட்சிகளில் 3 வது சாட்சியின் சாட்சியம் அரசு தரப்பில் விலக்கிக்கொண்டும், 5 வது சாட்சி இறந்துவிட்ட நிலையில் அவரது சாட்சியம் அரசு தரப்பில் விலக்கிக்கொண்டும், அரசு தரப்பில் அ.சா.1 முதல் 4 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1,2 சான்றுபொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) **<u>கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்</u>**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தங்கள் தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

7) **<u>அரசு தரப்பு வாதம்</u>**:

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் 4 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். 1,2,4 சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 ஆவணங்கள் மற்றும் அ.சா.பொ.1,2 சான்றுபொருட்கள் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

8) **<u>எதிரிகள் தரப்பு வாதம்</u>**:

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் மேற்படி வழக்கு சம்பவத்தை

எதிரிகள் தான் செய்தார்கள் என்று தனிநபர் சாட்சிகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றும், அ.சா.3 பார்வை மகஜர் சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

9) **குற்றச்சாட்டு மீதான விவாதம்** :

எதிரிகள் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

10) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை** :

(i) அரசு தரப்பு வழக்கின்படி வழக்கு சம்பவம் கடந்த 14.08.2016 ம் தேதி 12.00 மணிக்கு மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய சரகம் அரசனார்குளத்திலுள்ள சுமார் ரூ.3000/- மதிப்புள்ள மணலை TN 74 W 4802 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா நிசான் டிம்போவில் எதிரிகள் அரசனார்குளம் குளத்துக்குள் கூட்டாக சேர்ந்து எவ்வித அரசு அனுமதியின்றி சொந்த லாப நோக்கிற்காக ரூ.3000/- மதிப்புள்ள 1 யூனிட் குளத்து மணலை திருடி அரசுக்கு ஆதாய இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும்.

(ii) அ.சா.1,2 முதல்விசாரணையில் "மேற்படி குளத்தில் இருந்து சந்தேகத்தின் படி எதிரே வந்த மகேந்திரா நிஸான் TN 74 480 பதிவெண் கொண்ட வாகனத்தை மறித்த போது மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் நிறுத்தாமல் தங்கள் மீது மோத வந்தார்" என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்கின் படி வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமானது TN 74 W 4802 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா நிசான் டிம்போவில் மணல் கடத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சாட்சியங்களிலிருந்து எதிரிகள் வாகனத்தில் மணலை கடத்தி வந்தார்களா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

(iii) மேலும் அரசு தரப்பு வழக்கானது  எதிரிகள் 1 யூனிட் குளத்து மணலை எவ்வித அரசு அனுமதியின்றி  அரசனார்குளத்தில் இருந்து எடுத்து வந்ததாகவும், அந்த மணலை கைப்பற்றி பொதுப்பணித்துறையிடம் அ.சா.ஆ.4 ன் கடிதம் படி ஒப்படைக்கப்பட்டதாக  குறிப்பிடப்பட்டுள்ளது.  ஆனால் அத்தாட்சி மற்றும் முதல்தகவல் அறிக்கையில் ரூபாய் 3000/- மதிப்புள்ள குளத்து மணல்  எடுத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.  மேற்படி விபரங்களிலிருந்து எதிரிகள் குளத்து மணலை கடத்தி வாகனத்தில் கடத்தி வந்தார்களா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

(iv) மேலும் அரசு தரப்பு வழக்கானது எதிரிகள் மற்றும் சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றும் போது பொது மக்கள் யாரும் சாட்சி கையொப்பம் செய்ய முன்வராததால் அத்தாட்சியில்  அ.சா.2  மற்றும் சாட்சி ஜெயகுமார் ஆகியோர்கள் கையொப்பம் செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.  சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் இருந்தும் அவர்களை விசாரணை செய்யாதது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

(v) அரசு தரப்பில் அ.சா.3 பார்வை மகஜர் சாட்சி  அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது.  ஆகையால் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து புலன்விசாரணை அதிகாரியால்  தயார் செய்யப்பட்டது என்பது அரசு தரப்பில் போதிய சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

(vi)  மேற்படி சாட்சியங்கள் கொண்டு வழக்கு சம்பவ இடம் மற்றும் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றபட்டதையும்,  சொத்து அரசு சொத்து தான் என்பதையும் அரசு தரப்பில்  நிரூபிக்கவில்லை.  எதிரிகளுக்கு எதிரான குற்றசாற்றை பொறுத்து, போதிய முகாந்திரம் கொண்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.  ஆகவே  1,2,3 எதிரிகள்

மீதான இ.த.ச. பிரிவு 379ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11) **இறுதியாக**, அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து இவ்வழக்கின் 1,2,3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 379 படியும், குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி 1,2,3 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12) **வழக்கு சொத்து மீதான உத்தரவு** :

இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிடை சொத்தான பி.ஆர்.எண்.337/2016-ல் கண்டுள்ள வழக்கிடை சொத்தான TN 74 480 என்ற பதிவு எண் கொண்ட நிசான் டிம்போ சி.ஆர்.எம்.பி. எண் 8718/2016 ல் 07.11.2016 தேதியிட்ட உத்தரவின் பேரில் நிபந்தனைகளுக்குட்பட்டு இடைக்கால பிணையில் 1 வது எதிரி மகாதேவன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு அவரே வைத்துக்கொள்ளவும் இடைக்கால பிணைபத்திரம் தானாகவே இரத்தாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.23 18:15:00 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

'**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. முருகன் (அத்தாட்சி சாட்சி) |

| | |
|---|---|
| அ.சா.2 | திரு. முத்துகிருஷ்ணன் (அத்தாட்சி சாட்சி) |
| அ.சா.3 | திரு. ஐயப்பன் (பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.4 | திரு. கதிரேசன் (வழக்கு சம்பவத்தின் போது காவல் உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 14/08/2016 ம் தேதியிட்ட அத்தாட்சி |
| அ.சா.ஆ.2 | 14/08/2016 ம் தேதியிட்ட தனி அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 14/08/2016 ம் தேதியிட்ட அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.2 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 14/08/2016 ம் தேதியிட்ட பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.3 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 14/08/2016 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 14/08/2016 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 14/08/2016 ம் தேதியில் பதிவு செய்த மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 14/08/2016 ம் தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.9 | வழக்கில் கைப்பற்றப்பட்ட மணலை அரசுக்கு சேர்க்கும்விதமாக பொதுப்பணித்துறையில் ஒப்படைத்ததற்கான கடிதம் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** -

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | வாகனத்தின் புகைப்படம் |
| அ.சா.பொ.2 | வாகனத்தின் புகைப்படம் |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்** -

இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.23 18:15:12 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4. | எதிரிகளால் பிறப்பிக்கப்பட்ட பிணைபத்திரம் இன்றிலிருந்து 1 மாத காலத்திற்கு பின்பு தானாகவே இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |
| 5. | எதிரிகளால் கு.வி.மு.ச. பிரிவு 437(A) Cr.P.C. -ன் கீழ் பிறப்பித்த பிணைபத்திரம் 6 மாத காலத்திற்கு பின்பு தானாக இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |